**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 4.5.2012**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன எண்ணிக்கை உயர்வினால் அதிகரித்து வரும் சாலை விபத்துகளை தவிர்க்கும் வகையில், ''வேகம் விவேகமன்று'' என்பதை உணர்ந்து, சாலை விதிகளை சரியாக கடைபிடித்து, வாகனங்களை இயக்கக்கூடிய திறமையான ஓட்டுநர்களை உருவாக்கக்கூடிய சர்வதேச தரம் வாய்ந்த ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

தரமான ஓட்டுநர்களை உருவாக்கும் பொருட்டு, சாலை போக்குவரத்து நிறுவனத்தால் கும்மிடிப்பூண்டியில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு ஒன்று 1979–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 55 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தப் பயிற்சிப் பிரிவு வளாகத்தில் அலுவலகம், வகுப்பறைகள், ஓட்டுநர் பயிற்சி ஆய்வுக் கூடம், பணிமனை, மாணவர் விடுதி மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகள் போன்ற வசதிகளுடன், ஓட்டுநர் பயிற்சித் திறன்களை மேம்படுத்தும் வகையில் ஓட்டுநர் பயிற்சி மைதானமும் 15 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பப் பயிற்சியின் மூலம் தரமான ஓட்டுநர்களை உருவாக்கும் வகையிலும், அறிவியல் ரீதியில் ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் வண்ணமும், அவர்களது பண்பாட்டினை உயர்த்தும் வகையிலும், விபத்துகளை தவிர்க்கும் வகையிலும், இந்த ஓட்டுநர் பயிற்சி மையம், பல்வேறு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய சர்வதேச தரத்திற்கு இணையாக உறைவிடத்துடன் கூடிய ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையமாக 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்மூலம், ஓட்டுநரின் திறமையை விஞ்ஞான முறையில் காணொலியுடன் பதிவு செய்யப்பட்ட வசதிகளுடன் ஆராய்ந்து, திறனில்லாத ஓட்டுநர்களை எளிதில் கண்டறியவும், அவர்களுக்கு தரமான பயிற்சி அளிக்கவும் வழிவகை ஏற்படும். இவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச ஓட்டுநர் உரிமங்களை வழங்கும்.

மேலும், இங்குள்ள கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களின் திறன்கள் மேம்படுத்தப்படும்.

சர்வதேச தரத்திலான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமாக கும்மிடிபூண்டியிலுள்ள ஓட்டுநர் பயிற்சி பிரிவு தரம் உயர்த்தப்படுவதன் மூலம் தமிழகத்திலுள்ள போக்குவரத்து விதிகளை நன்கு அறிந்து, சாலைகளின் தன்மைக்கேற்ப வாகனங்களை இயக்கி, விபத்துகளை பெருமளவில் தவிர்க்கும் திறன் கொண்ட ஓட்டுநர்களை உருவாக்குவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******